காப்பியக் கதைகள்

ஆறாம் புத்தகம்

யசோதரன்

ச. அ. இராமசாமிப் புலவர்

ருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெ
24, கீழத் தேர்த் தெரு. திருநெல்வேலி. & 1/140, பிராட்வே, சென்

கழக வெளியீடு :—௫௧௧

காப்பியக் கதைகள்

(ஆறும் புத்தகம்)

யசோதரன்

சு. அ. இராமசாமிப் புலவர்

:: திருநெல்வேலித் தென்னிந்திய ::
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை, 1.

First Edition : November, 1949

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1-140, BROADWAY :: MADRAS.

Head Office

24, EAST CAR STREET :: THIRUNELVELI.

அப்பர் அச்சகம், சென்னை - 1.

10.7.25

பதிப்புரை

மாணவர்களுக்குக் கதைகளில் விருப்பம் அதிகம். இனிய தமிழ்நடையில் அமைந்து விளங்கும் சுவையான கதைகள் அவர்கள் ஆவலை நிறைவேற்றுவதுடன் தமிழ் மொழி யறிவையும் வளர்க்கின்றன.

தமிழ் மொழியிலுள்ள காப்பியங்கள் ஒவ்வொன்றும் சுவையான பல்வகை நயங்களும் நிறைந்தவை. அவற்றைக் கற்றுப் பயன்பெறவேண்டும் என்ற எண்ணம் இளமாண வர் உள்ளங்களில் முகிழ்க்கவேண்டும். முகிழ்ப்பின், பெரிய வர்களாகுங் காலத்தில் தமிழ்மொழியில் நல்ல தேர்ச்சியும், ஆர்வமுங் கொண்டு விளங்க ஏதுவாகும். எனவே, காப்பி யங்களில் பயின்றுவரும் கதைகளை இளமாணவர் விரும்பும் முறையில், எளிய இனிய தமிழ்நடையில் வெளியிட எண்ணினோம்.

இவ்வரிசையில் முன்னர் சிலப்பதிகாரம், மணி மேகலை, சிந்தாமணி, உதயணன், நரவாணன் & திவிட்டன் ஆகிய ஐந்தும் வெளிவந்தன. இப்போது ஆறுவதாக யசோதரன் வரலாறு வெளிவருகின்றது.

திரு. இராமசாமிப் புலவர் அவர்கள் மிகவும் சிறப் பான முறையில் இக்கதையினை ஆக்கித்தந்துள்ளார்கள். கதைகளை விளக்கும் ஒவியங்களும் அங்கங்கே சேர்க்கப் பெற்றிருக்கின்றன.

மாணாக்கர்களும், ஆசிரியர்களும், பொதுமக்களும் இந்நூலை நன்கு வரவேற்பார்கள் என, நம்புகின்றோம்.


திருவள்ளுவர் ஆண்டு, ககஅ0
கார்த்திகை, 22-11-49. } சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்

பொருளடக்கம்

காப்பியக் கதைகள்

6

யசோதரன்



இரட்டையரைப் பலியிட மாரிதத்தன் வாளுருவி நிற்றல் [பக்கம் 6.]

யசோதரன்

1. அபயருசியும் அபயமதியும்

நாடும் அரசனும்

ஓதயநாடு என்னும் பெயருடைய ஒருநாடு முன்னுளிலே நமது பாரதகண்டத்திற் சிறந்துதிகழ்ந்தது. அந்நாடு எல்லாநலங்களும் இனிதமையப்பெற்று விளங்கியது. மாரிதத்தன் என்னும் பெயரினையுடைய அரசன் அந்நாட்டினை அரசுபுரிந்துகொண்டிருந்தான். இராசபுரம் என்னும் நகரம் அந்நாட்டின் தலைநகராகும். அந்நகரம் அழகிற்சிறந்தது. தனக்கு ஒப்பிலாத பெருஞ்சிறப்பு வாய்ந்தது. நகரின் மதில்கள் முகில் மண்டலத்திற்கு மேலுஞ் சென்று நிமிர்ந்து விளங்கின. நகரின் மாளிகைகளோ திங்கள் மண்டலம் வரை சென்று, மிளிர்ந்தன. மங்கையரின் ஆடல்பாடல்களால் அந்நகரம் வித்தியாதரர் உலகத்தினும் மேம்பட்டு நின்றது.

மாரிதத்தமன்னன் கைம்மாறு கருதாது கொடை வழங்குவதில் முகிலைப்போற்சிறந்தவன். மக்கள் இன்பமுறும்படி ஆட்சிசெய்தான். அந்நகர் மிகுந்த செல்வச் சிறப்புடையதாகையால் மக்கள் யாதொரு குறையுமில்லாமல் வாழ்ந்திருந்தனர்.

இளவேனிற்காலம் வந்தது. மக்கள் பலவகையான ஆடல்பாடல்களிலும் உள்ளத்தைச்செலுத்தி மகிழ்ந்தனர். நகரமக்கள் அரசனையடைந்து, 'சண்டமாரி'

என்னுந் தெய்வத்திற்குத் திருவிழாப் புரிதல்வேண்டும் என்றும், இன்றேல் நோய்முதலிய தீமைகள்வந்து சேரு'மென்றும் கூறினர். மக்கள் கூறிய மொழிக்கு மன்னனும் இணங்கினன்.

சண்டமாரி என்னுஞ் சிறுதெய்வம் பெருஞ்சிறப் புடைய தன்று. மிகுந்த சினமுடையது. மெய்யறி வில்லாக் கீழ்மக்களாற் போற்றப்படுவது. அத்தகைய சிறுதெய்வத்தின் கோயிலை அரசன் அடைந்தான். அதனைப் போற்றி வணங்கினன்.

அரசனுடைய ஆணைப்படி மக்கள் மயில், கோழி, பன்றி, ஆடு, எருமை முதலியவைகளின் இரட்டைகளைப் பலியிடுதற்குக் கொண்டுவந்தனர்.

மக்கள் தங்கள் தகுதிக்கேற்ப விலங்கினத்தைப் பலிகொடுப்பின், நாம் நம்முடைய பெருமைக் கேற்கும் படியாக மக்களில் இரட்டையாகப் பிறந்துள்ளவர்களை, நம்முடைய வாட்படையினலே நரபலியாகக் கொடுக்க வேண்டுமென்று எண்ணினன்.

மக்களில் இரட்டையாகப் பிறந்துள்ளவர்களைத் தேடிக் கொண்டு வருமாறு, சண்டகருமன் என்னுந் தன்னுடைய பணியாளனை அனுப்பினன். அவனும் அரசனுடைய பலிக்குத் தகுதியான இரட்டையர்களைத் தேடிக்கொண்டு சென்றான்.

அபயருசியும் அபயமதியும்

சுதத்தன் என்னும் முனிவர் ஒருவர் தம்முடைய மாணவர்களோடு அங்நகரை நோக்கிவந்தார். இராச புரத்திற்குப் புறத்தேயுள்ள ஒரு பொழிலில் தங்கினர். அபயருசி என்னும் பெயரையுடைய ஆணும், அபயமதி

என்னும் பெயருடைய பெண்ணும், உடன்பிறந்த இரட்டையர்களாய் மாணவர் கூட்டத்தில் இருந்தனர். அவர்கள் மிகுந்த பசியுடையவர்களாக இருந்தார்கள். அவர்கள் பசியுடன் இருத்தலைச் சுதத்தமுனிவர் உணர்ந்தார். அவர்க ளிருவரையும்பார்த்து, 'நகருக்குட் சென்று ஐயமேற்றுண்டு வாருங்கள்' என்று பணித்தார். அவர்களும் அவரை வணங்கி நகருக்குட் சென்றனர். ஐயமேற்று உண்டுவிட்டுத் தெருவழியே சென்றனர்.

பலிகொடுத்தற்கு இரட்டையர்களைத் தேடிக் கொண்டுவந்த சண்டகருமன் அபயருசியையும் அபய மதியையுங் கண்டான். இருவரும் ஒரே தன்மையுடைய வர்களாய் இருத்தலைக்கண்டு இவர்கள் இரட்டையர் களே என்று முடிவுசெய்தான். தன்னுடன்வந்த பணி யாளர்களைக்கொண்டு அவ்விருவரையும் வலிந்து பிடித் துக்கொண்டான். எத்தகையோருக்குந் தீமைசெய்தலைச் சிறிதும் எண்ணாத இரட்டையர் இருவரும், யாதும் பேசாமல் அவர்களுடன் சென்றனர்.

சண்டமாரி கோயிலை நோக்கித் தம்மைப் பிடித்துச் செல்லுதலைக் கண்ட இரட்டையர்கள், தங்களைப் பலி யிடற்பொருட்டே பிடித்துக்கொண்டு செல்லுகின்றனர் என்பதை உணர்ந்துகொண்டார்கள். அபயருசியின் தங்கையாகிய அபயமதி அச்சமுற்றாளைப் போன்று காணப்பட்டாள். அபயருசி தன் தங்கையைப் பார்த்து, 'வீணாக அஞ்சுதலாலே யாதும் பயனில்லை யென்றும், அச்சத்தாலே துன்பந்தான் உண்டாகு மென்றும், தீவினைப்பயன் நுகராமல் ஒழியா தென்றும், இறப்பு உண்டாவதெல்லாம், பிறப்பு உண்டாவதற்குத்தான் என்றும், அறநெறியை மேற்கொண்டவர்கள் பிறக்க மாட்டார்க ளென்றும், தேவர்களின் உடம்புகூட

அழிந்துபோவதுதான் என்றும், இறந்து பிறத்தல் என்பது ஓராடையை அகற்றிவிட்டு மற்றோராடையை அணிதலையும், நெடுநாள் வாழ்ந்த வீட்டை நீக்கிவிட்டுப் புதுவீட்டிற் குடிபுகுதலையும் போன்றதாகுமென்றும்' அறவுரைகள் பல கூறினன். அபயமதியும் அச்சம் நீங்கினள். தன் அஞ்சாமையை அண்ணனுக்குப் புலப் படுத்தினள். கடவுளை வணங்கித் தம்முடைய உடலை விடுவதென்று இருவரும் உறுதி செய்துகொண்டனர்.

அரசன் இருவரையும் பலியிட முயலுதல்

சண்டகருமன் இருவரையுஞ் சண்டமாரி கோயி லுக்குக் கொண்டுபோய் அரசன்முன்பு நிறுத்தினன். தன் விருப்பப்படி இரட்டையர்களைத் தேடிக்கொணர்ந் ததற்காக அரசன் சண்டகருமனைப் பாராட்டினன். இருவரையும் பலிகொடுக்கும் இடத்திலே நிறுத்துமாறு கட்டளையிட்டான். பலி கொடுத்தற்குத் தோதாகத் தன் வாளைக் கையிலே உருவிக்கொண்டான். அரசனுக்கு அண்மையில் நின்றோர், 'இந்நிலவுலகினுக் கரசனாகிய மாரிதத்தமன்னன் நெடிது வாழ்க என்று வாழ்த்துரை கூறுங்கள்' என்று பணித்தனர். அவர்கள் கூறியதைக் கேட்டு உடன்பிறந்தார் இருவரும் இரங்கிச் சிறிது புன்னகை புரிந்தார்கள். பின்னர், 'அரசனே! நீ அருண் மிகுந்த மனமுடையவனாக உலகத்துயிர்களைக் காப் பாற்றி நீடூழி வாழ்வாயாக!' என்று வாழ்த்துரை கூறினார்கள். அபயருசியும் அபயமதியுஞ் சிறிதுங் கலங்காதிருத்தலைக்கண்டு அரசன் வியப்படைந்தான். 'இறத்தற்குக்கூடச் சிறிதும் அஞ்சாது துணிந்து நிற்கும் இவர்கள் யாவர்? விண்ணுலகத்தவர்களா? அன்றி மண்ணுலகத்தவர்களா? இவர்களுடைய செயல் நினைப் பதற்குக்கூட அருமையானதாக இருக்கின்றதே' என்று

எண்ணினன். அவ்விருவரையும் பார்த்து, 'நீங்கள் இறப்புக்குச் சிறிதுங் கலங்காது களித்துநிற்றற்குக் காரணம் யாது?' என்று கேட்டான்.

அபயருசி பதிலுரைத்தல்

அபயருசி அரசனைப்பார்த்து, 'ஓ அரசனே! நாங்கள் முன்னரெடுத்த பல பிறப்புக்களிலும் செய்த தீவினையினலே, பல பிறப்புக்களிலும் இத்தகைய துன்பங்கள் உண்டாகப்பெற்றேம். மிகுந்த தீவினையினலே உயிர்க்கொலைபுரியும் அரசன், அக்கொலையின் பயனாக நீடூழி வாழ்க என்று வாழ்த்தினல் யாதாக முடியுமோ என்று எண்ணினேம். அவ்வளவில் எமக்கு நகைப்புண்டாயிற்று.' என்று கூறினன். அங்குத் திரண்டிருந்த மக்கள் அபயருசியின் உரையைக்கேட்டு வியப்படைந்தனர். 'இவ்வாடவன் இயம்பிய ஆண்மையுரை இவனுடைய அழகினுக்கு ஏற்றதேயாகும். ஆனல், இம்மங்கையின் அஞ்சாமைப் பண்புதான் மிகச் சிறந்ததாக விளங்குகின்றது' என்றனர்கள். மாரிதத்தமன்னன் அபயருசியின் மொழிகளைக்கேட்டு வியப்படைந்தான். 'நீங்கள் எவ்வெவ் பிறப்புக்களை யெடுத்தீர்கள்? அவ்வப் பிறப்புக்களில் உங்களுக்கு நிகழ்ந்தன யாவை? நீங்கள் பிறந்த குலம் யாது? இளமைக் காலத்தில்தானே இவ்வாறு துறவு மேற்கொள்ளக் காரணம் யாது? இவைகளை எனக்கு விளங்க வுரையுங்கள்' என்று கூறினன்.

'ஓ அரசனே! நாங்கள் நவிலும் நன்மொழிகள் அருளொடு பொருந்திய மனமுடையவர்கட்கேயன்றி மற்றையவர்கட்கு நற்பயனை யுண்டாக்கமாட்டாது. ஆகையால், அறம் பொருந்திய மனமுடையவனகவும் கருத்தோடும் அவ்வுரைகளைக் கேட்பாயாக' என்றான்.

அபயருசியின் மொழிக்கு அரசன் இணங்கினன். தன வாளை உறையிற் சொருகினன். தன்னுள்ளத்தைத் தூய்மை செய்துகொண்டான். அபயருசியை வணங்கி நின்று, 'எனக்குக் கடவுளும் ஆசிரியனும் நீயே; உன்னுடைய வரலாற்றை உரைப்பாயாக' என்றான். அபயருசி அரசனைப் பார்த்து, 'ஓ அரசனே! நான் கூறும் அறவுரைகளைக் கேட்பதற்குத் தக்கபடியாகப் பயனுண்டாகும். அவ்வுரைகள் உண்மையுணர்ச்சியை வளரச்செய்யும். சிற்றின்ப விருப்பைப் போக்கிப் பேரின்ப விருப்பை உண்டாக்கும். கொலை முதலிய தீவினை யுணர்ச்சிகளைப் போக்கும். யான் கூறும் உரைகளை அருந்தவர்கள் உரைத்தருளினர்கள். மேலும், நாங்கள் முற்பிறவிகளின் வரலாறுகளை அறியும் அறிவுடைமையாலும் நன்கு அறிந்துகொண்டோம். ஆதலால், அவ்வறவுரையை விரும்பிக் கேட்டல்வேண்டுமென்று கூறினன். அங்கிருந்தவர்களனைவரும் மிகுந்த கருத்துடனும் விருப்பத்துடனும் கேட்கலானர்கள்.

2. யசோதரனும் அமிர்தமதியும்

அவந்திநாடு என்று ஒரு நாடு உள்ளது. அந்நாடு அளவற்ற மக்களைத் தன்னிடத்தேகொண்டது. அந் நாட்டில் உஞ்சயினி என்று ஒரு நகர் இருக்கிறது. அந் நகர்தான் அந்நாட்டிற்குத் தலைநகர். அந்நகர் தேவர் களும் விரும்பும்படியான சிறப்பினையுடையது. அந் நாட்டினை அசோகன் என்னும் அரசன் அரசாட்சி புரிந்துகொண்டிருந்தான். அவன் இந்திரனைப்போன்ற சிறப்புடையவன். அவனுடைய மனைவியின் பெயர் சந்திரமதி. அவர்கள் இருவரும் இல்வாழ்க்கையை இனிது, நடத்திக்கொண்டிருந்தார்கள். சந்திரமதி ஓராண் குழந்தையைப் பெற்றாள். அசோகமன்னன் அக்குழந்தைக்கு 'யசோதரன்' என்று பெயரிட்டான்.

யசோதரன் திருமணம்

யசோதரன் நாளோர் உடலும் பொழுதோர் அழகு மாக வளர்ந்தான். அவ்வக்காலத்திற்கு உரிய சிறப்புக் கள் அவனுக்குச் செய்யப்பெற்றன. கல்வியை நன்கு கற்றுத் திகழ்ந்தான். இளம் பருவத்தைக் கடந்து காளைப்பருவத்தை யடைந்தான். தன் மகன் யசோதரன் பருவமெய்தியதைக் கண்ட அசோகமன்னன், அமிர்தமதி என்பவளை அவனுக்கு மணஞ்செய்வித்தான். யசோதரனும் அமிர்தமதியும் இன்பவாழ்வில் இனிது பொருந்திநின்றனர். அந்நாளில் யசோதரனுக்கு ஓராண் குழந்தை பிறந்தது. அதற்கு யசோமதி என்று பெய ரிட்டு விழாக்கொண்டாடினர்.

அசோகன் மயிர் நரை காண்டல்

ஒருநாள் அசோகமன்னன் கண்ணுடியிலே தன்னுடைய அழகைப்பார்த்து மகிழ்ந்துகொண்டிருந்தான். அவனுடைய தலைமயிர் ஒன்று நரைத்திருப்பது தெரிந்தது. அதனைக்கண்ட அரசனுக்கு நாம் முதுமையடைந்துவிட்டோம் என்று மனக்கவலை யுண்டாகியது. அதனுல் மனம் வருந்தினுன். உடலானது நிலையில்லாதது; ஆகையால், துறவறம் மேற்கொள்ளுதலே சிறந்ததாகும் என்று எண்ணினுன். 'முன் பிறவிகளிற் செய்த நல்வினையின் பயனுக இப்பிறவியில் அறிவையுஞ் செல்வத்தையும் அடைந்து மகிழ்ந்தோம். இப்பிறவியில் இன்னும் மிகுதியான நல்வினையைச் செய்வோமானுல் மறுபிறவியில் தேவருலக வாழ்வையும்பெறலாம்' என்று எண்ணினுன்.

அசோகன் துறவறம் அடைதல்

அசோகன் காலங்கடத்தாமல் உடனே தன் மகன் யசோதரனுக்கு முடிசூட்டினுன். மக்கள் வருந்துமாறு அரசியலை நீங்கிச்சென்ருன். குணதரர் என்னும் முனிவரை வணங்கி அறவுரைகேட்டான். தவஞ்செய்தற்பொருட்டுத் தவக்கோலம் பூண்டான். தன் மனைவி சந்திரமதி வருந்துமாறு காட்டை நோக்கிச் சென்ருன். நூறு அரசர்கள் அசோகமன்னனைப் பின்தொடர்ந்து தவஞ்செய்தற்குச் சென்ருர்கள். யசோதரன் உஞ்சயினி நகரத்து அரசனுக அரசுசெலுத்திக்கொண்டிருந்தான். அவன் குடைநிழலில் உலகம் தங்கிநின்றது. மிகுந்த செல்வக் களிப்பினையுடைய யசோதரன் அறநெறியை அகன்று ஒழுகினுன். பிற அரசர்களுடைய நாட்டின் மீதும் பேரவாக்கொண்டான். பல நாடுகளை வென்று

தன்னடிப்படுத்தினன். இன்பவாழ்வையே இனிதாக எண்ணினன். ஆடல் பாடல்களிலே பெரிதும் மனம் மகிழ்ந்திருந்தான்.

அட்டபங்கன் இசைபாடுதல்

ஒருநாள் இரவில் யசோதரமன்னனும் அமிர்தமதியும் தம் பள்ளியறையிலே உறங்கிக்கொண்டிருந்தனர். அட்டபங்கன் என்னும் பெயரையுடையவன் யசோதர மன்னனுடைய யானைப்பாகன் ஆவன். அவன் இசை பாடுவதிற் சிறிது பயிற்சி யுடையவன். யானைக்கூடத்தில் உறங்கிக்கொண்டிருந்த அவன் நள்ளிரவில் விழித்துக்கொண்டான். மீண்டும் உடனே அவனுக்கு உறக்கம் பிடிக்கவில்லை. 'மாளவபஞ்சமம்' என்னும் பண்ணை மிகவும் இனிமைததும்பப் பாடினன். அப்பண்ணினல் அரசி அமிர்தமதி விழித்துக்கொண்டாள். யானைப்பாகனுடைய இசை அமிர்தமதியின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டுவிட்டது.

அரசி நெறி தவறுதல்

அப்பண்ணைப் பாடிய அட்டபங்கனிடத்திலே அரசி பெருங் காதல்கொண்டுவிட்டாள். தன்னுடைய நெறியை அடியோடு மறந்துவிட்டாள். யானைப்பாகனிடத்திலே மனதைப் பறிகொடுத்து உருகியழிந்தாள். தன்னுடைய தோழியாகிய குணவதியைத் தனிமையாக அழைத்தாள். தனது காதற்பெருக்கைக் கழறினள். அரசியின் மொழிகளைக் கேட்டுக் குணவதி அஞ்சி நடுங்கினள். அரசி கண்டது கனவாக இருக்குமென்று கூறி அரசியைத் தெளிவிக்க முயன்ருள். அரசியோ சிறிதுந் தெளிவடையவில்லை. இன்னிசைபாடியோனைத் தன் வழிப் படுத்தாவிடின் தான் இறந்தொழிய நேருமென்

ருள். இசைபாடியோன் யாவன் என்று அறியுமாறு தோழி சென்ருள்.

அட்டபங்கன் என்னும் பெயரினையுடைய யானைப் பாகனே இசைபாடியவன் என்று தெரிந்தது. அந்த யானைப்பாகன் கண்கொண்டு பார்க்கமுடியாதபடி அழ கற்றவனுகக் காணப்பட்டான். அவனுடைய உட லெலும்புகள் வெளியே தெரிந்தன. அவனுடைய நடை பேயாற் பிடிக்கப்பட்டவனுடைய நடையைப்போ லிருந்தது. உடலின் தோலோ திரைவிழுந்திருந்தது. முகமோ உடலுக் கேற்றபடியாக இல்லாமற் சிறிதாக இருந்தது. மேலும், அவன் முன்சினம் உடையவன். அவன் சினம்கொள்ளும்போது முகங் குரங்கு முகத்தைப் போன்றிருக்கும். முதுகோ கூனல்; கண்களோ குழி விழுந்து உட்சென்றவைகளாக இருந்ததன்றி அழுகியும் இருந்தன. பற்களோ இங்கொன்று அங்கொன்ருக நீட்டிக்கொண்டிருந்தன. அவ்விழிமகனுடைய தன்மை யைக்கண்ட தோழி அரசிக் குணர்த்தினுள். அத்தகை யோன்மீது உள்ளத்தைச் செலுத்துதல் மிக இழிவு என்றுரைத்தாள். ஆசைப்பெருக்கால் அறிவுக்கண்களை இழந்திருந்த அரசி, தோழியின் சொல்லைக்கேட்கவில்லை. எவ்வாருயினும் அவ்விழிமகனைத் தனக்கு உடன்படுத்த வேண்டுமென்று கெஞ்சினுள்.

குணவதி தூது

வேறு வழியற்ற தோழி அட்டபங்கனிடத்திற்குத் தூது சென்ருள். யானைக்கூடத்தின் ஓரிடத்திலே, குப்பைகூளங்களின்மேலே அட்டபங்கன் குறட்டை விட்டுத் தூங்கிக்கொண்டிருந்தான். அவனுடைய உடல் தீயநாற்றத்தை வெளிப்படுத்திக்கொண்டிருந்தது. தூது

சென்ற தோழி அட்டபங்கனைத் தட்டியெழுப்பினுள். அரசியின் எண்ணத்தைக் கூறினுள். அக்கீழ்மகன் தன் உயிருக்கு அரசனுல் இறுதிவரும் என்று அஞ்சி, அரசியின் காதலை மறுத்தான். ஆயினும், பின்னர் ஒருவாறு இணங்கினுன். அரசிவருங் காலத்தையும் இடத்தையும் அவனுக்குக் கூறிவிட்டுத் தான் அரசியிடம் சென்ருள். அட்டபங்கனுடைய உடன்பாட்டைத் தெரியப்படுத்தினுள். அவனுக்குத் தான் கூறிவந்த காலத்தையும் இடத்தையும் உரைத்தாள். அறிவிழந்த அரசி தன் எண்ணம் கைகூடியது என்று மகிழ்ந்தாள். அக்கீழ்மகனுடன் களவொழுக்கத்திலே ஈடுபட்டு நின்ருள்.

அரசன் அறிதல்

இசையினுல் வசையைத் தேடிக்கொண்ட அரசி, தன் முழுமனத்தையும் முழுமகனுகிய அட்டபங்கனிடத்திலே விட்டுவிட்டபடியால் அறிவுநிலை முழுதுந் திரிந்துநின்ருள். அரசனை ஒருபொருட்படுத்தாது வெறுப்புக் காட்டினுள். அரசியின் மனமாற்றம் அரசனுக்குத் தடுமாற்றத்தை அளித்தது. அமிர்தமதியின் மாறுபாட்டுக்குக் காரணம் கண்டுபிடிக்க எண்ணினுன். ஒருநாள் இரவு பள்ளியறையிலே படுக்கையின்மீது பொய்யுறக்கங்கொண்டு கிடந்தான். அரசன் மெய்யாகவே உறங்கிவிட்டான் என்று எண்ணிக்கொண்டு அமிர்தமதி அட்டபங்கனிடத்திற்குப் புறப்பட்டாள். அரசி புறப்பட்டதும், அவளறியாவாறு அரசனும் அவளைப் பின்தொடர்ந்து புறப்பட்டான்.

அட்டபங்கன், வழக்கமாக அரசியோடு மகிழ்ந்திருக்கும் இடத்தில் அரசியை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். வழக்கம்போல் வரும் காலத்தில் அரசி அன்று

வரவில்லை. தக்க காலத்தில் அரசி வராமையைக்கண்ட அட்டபங்கன் மிகுந்த சினங்கொண்டிருந்தான். அரசி மெதுவாக வருதலை அவனறிந்தான். விரைந்து அவள் மீது பாய்ந்தான். அரசியின் கூந்தலைக் கையாற் பற்றினுன். பரபரவென்று இழுத்துக்கொண்டு சென்றுன். கீழே தள்ளினுன். இரண்டு கைகளினுலும் அமிர்தமதியின் இரண்டு கன்னங்களிலும் பல அறைகள் கொடுத்தான். கால்களால் நன்முக உதைத்தான். 'வழக்கத்திற்கு மாருக இன்றைக்கு ஏன் காலந்தாழ்த்து வந்தாய்? அதற்குக் காரணம் கூறு' என்முன். அட்டபங்கனுல் நன்கு வருத்தப்பட்ட அரசி சோர்ந்து மறுமாற்றம்கூற முடியாமல் கிடந்தாள். அட்டபங்கன் சிறிதுபோதில் தன் முனிவு மாறினுன். அரசியை அடித்துவிட்டோமே யென்று வருந்தினுன். தன் பிழையைப் பொறுக்க வேண்டுமென்று அரசியினுடைய கால்களை வணங்கி வேண்டிக்கொண்டான்.

அட்டபங்கன் தன்னை வணங்கியதைக்கண்ட அரசி மகிழ்ச்சியடைந்தாள். இன்று அரசனேடு அரச அவையிலே திருவோலக்கம் இருக்கும்படியாக நேர்ந்து விட்டது. அதனுல்தான் நான் உனக்குப் பெருந்தவறு செய்துவிட்டேன். நான் நின்மேலே அடங்காக் காதல் கொண்டிருப்பதால், என்னுடைய பிழையைப் பொறுத் தருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டாள்.

சீறியெழுந்த மன்னன் ஆறியடங்குதல்

அரசியைப் பின்தொடர்ந்து வந்த வேந்தன் நிகழ்ந் தவைகளையெல்லாங் கண்ணினுற் கண்டான். அவனுக்கு அளவற்ற சினம் உண்டாகியது. இருவரையுந் தன் னுடைய வாளுக்கு இரையாக்கிவிடலாமென்று முடிவு

செய்தான். தன்னுடைய வாளை உறையிலின்றும் வெளியே யெடுத்தான். அச்சமயத்தில் அரசனுக்கு நல்லுணர்வுதோன்றி அவனுடைய கொலை யெண்ணத்தைத்தடுத்தது. 'மாதர்கள் எத்தகைய கொடிய குற்றஞ் செய்தாலுங் கொலை செய்யப்பெறுதற்கு உரியவர்களாகார். அட்டபங்கனுகிய இந்த யானைப்பாகன் ஆண்மகனுயினும் அறிவின்மையாற் பேதையரையே ஒப்பான். மேலும், பகை மன்னர்களைத் துணித்தற்குரிய இவ்வுயரிய வாட்படையால், மிக இழிந்த நடத்தையுடைய இவர்களைக் கொல்லுவது தகாது' என்று முடிவுசெய்து வாட்படையை உறையிற் செலுத்தினன். தன் சினம் தணிந்தான். திரும்பித் தன் பள்ளியறையை அடைந்தான்.

காம மயக்கத்தால் விளையும் பெருங்கேட்டை அரசன் எண்ணிப்பார்த்தான். 'காமமானது நற்செயல்களுக்குக் கேடு விளைவிக்கிறது. சிறந்த புகழைக் கெடுத்துப் பழியை வளர்க்கிறது. பொறிகளைக் கலங்குமாறு செய்கிறது. திருமகளையொத்த அரசியைப் புழுவினும் இழிந்த யானைப்பாகன்பாற் சென்று அழியுமாறு செய்தது. இக் கொடிய காமத்தை அகற்றுவதே முறையாகும்' என்று எண்ணினன்.

அரசாட்சியைத் துறக்க முடிவு செய்தல்

மேலும் 'இந்நிலமகள் சேர்ந்தவர்கட்கு உரியவளாக மாட்டாள். நல்வினையுள்ளவர்கள் இடத்திற்கெல்லாஞ் செல்வாள். நல்வினையுள்ளவரையிலும் இருந்து பிறகு நீங்கி விடுவாள். மானிடப்பெண்களுடைய இயற்கையும் அத்தன்மையதேயாகும். இவர்களைத் துறந்து செல்வதுதான் சிறந்ததாகும்' என்று முடிவுசெய்தான்.

மறுநாள் அரசன் பேரவையில் இருத்தல்

மறுநாள் அரசனுடைய பேரவைகூடியது. அரசன் தான் கண்டுபிடித்த உண்மையினைச் சிறிதும் புலப் படுத்திக்கொள்ளாமல் திருவோலக்கத்திற் சென்று வீற் றிருந்தான். அரசியும் வழக்கம்போற்சென்று அரச னோடு அமர்ந்திருந்தாள்.

யசோதரன் தாயிடஞ் செல்லுதல்

அரசன் அரச அவையைக் கலைத்துவிட்டுத் தன் தாயிருக்கும் இடத்திற்குச் சென்றான். தாயைக்கண்டு வணங்கினான். சந்திரமதியாகிய தாய் தன் மகனைக் கண்டதும் வாழ்த்துரை கூறினாள். தன் மகன் முகஞ் சோர்ந்துபோயிருப்பதைக் கண்டாள். அவள் தன் மகனைப்பார்த்து, 'ஓ அருமை மகனே! நினக்கு நிகழ்ந்தது யாது? உன்னுடைய முகம் ஏன் சோர்ந்து போயிருக்கின்றது?' என்று கேட்டாள். யசோதர மன்னன் தன் தேவியின் தீய ஒழுக்கத்தைச் சொல்லு தற்கு நாணினான். பிறகு மறைமுகமாகக் கூறுதற்குத் துணிந்தான். தன் தாயைப்பார்த்து, 'ஞாயிற்றினைச் சேர்ந்திருந்த திங்களானது, தன்னுடைய ஒளியும் ஞாயிற்றினுடைய ஒளியுங் கெடுமாறு மண்ணுலகத்தை யடைந்து இருளைச் சேர்ந்ததுபோல் நான் கனவு கண்டேன். இதனால் யாது தீமை விளையுமோ என்று எனதுள்ளம் மிகுதியும் அஞ்சுகின்றது' என்று சொன் னான். அரசனுடைய தாய் அரசன் கண்டதாகக்கூறிய கனவின் பலன் நிகழ்ந்ததாக உணராமல் மேலே நிகழக் கூடியதாக எண்ணினாள்.

சண்டமாரியை வழிபடவேண்டும் என்றல்

சந்திரமதி தன் மகனாகிய யசோதரனைப் பார்த்து, 'நினக்குக் குலதெய்வம் சண்டமாரி தேவியாவாள்.

பின்னுல் ஏற்படக்கூடிய தீமையை அவள் முன்னுல் கனவின் மூலமாக இவ்வாறு உரைத்திருக்கின்ருள். மகனே! நீ இதைப்பற்றி அஞ்சுதல்வேண்டாம். சண்ட மாரி தேவிக்கு வழிபாடுசெய்து திருவிழாக் கொண் டாடுவாயானுல், வரக்கூடிய தீமைகள் வராமற் கெட்டுப் போகும். ஆடு ஒன்றை உன்னுடைய வாட்படையினுற் கொன்று தேவிக்குப் பலிகொடுத்தல்வேண்டும். அவ் வாறு செய்யின் தேவி உன்னை நன்ருகக் காப்பாற்று வாள்' என்று கூறினுள்.

தன் தாய் கூறிய அருளற்ற மொழிகளைக்கேட்ட யசோதரமன்னன் மிகுந்த வருத்தமடைந்தான். 'கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதையாக இருக்கிறதே! நாம் நம்முடைய தாயின்பால்வந்து செய்தி சொல்லியது' என்று எண்ணினுன். தன் காதுகளைக் கைகளாலே மூடிக்கொண்டான். தன் தாயைப்பார்த்து, 'அம்மையே! நான் அழிந்து கெட்டுப்போகும்படியான தீமைகள் எனக்கு ஏற்பட்டனவாயினும் நான் அவைகளைப் பொறுத்துக்கொள்வேன். அவ்வாறு பொறுத்துக் கொள்ளாமல், என்னுற் காக்கப்படும் உயிர்களுக்குத் தீமை செய்வேனுயின் கொலை வினையாளனுகிய எனக்கு என்ன நன்மை ஏற்படும்? உலகத்துயிர்த் தொகைகளுக் குப் பாதுகாப்பாக இருப்பவர்கள் அரசர்கள் அல் லரோ? நான் நன்மையுடன் வாழ்தலையெண்ணி, எளிய உயிர்களைக் கொலைபுரிவேனுயின், மறுமைக்கண் ஏற் படக்கூடிய நன்மையானது ஏற்படாமல் நீங்கிப் போகும். அல்லாமலும், முன்காலத்திலிருந்த நம்முடைய முன்னோர்கள் உயிர்க்கொலைபுரிந்து நன்மையடைந்த கொடியவர்களல்லர். அவ்வாருக இப்போது உனக்குக் கொலையெண்ணம் ஏன் உண்டாகியது? இம்மைக்கண்

உயிர்களைக் கொலைபுரியுந் தீவினையால் மறுமைக்கண் பல துன்பங்கள் உண்டாகும். ஆகையால், நீ கூறியது சிறிதும் நன்மையான செயலன்று' என்று கூறினான்.

தான் கூறிய உரையைத் தன் மகன் மறுத்துரைத்ததைக்கண்ட சந்திரமதி சினங்கொண்டாள். 'மகனே! நான் கூறுவதை நீ கேட்கமாட்டேன் என்கிறாய். நீ மிகப் பொல்லாதவன். நான் கூறியபடி உயிருள்ள ஆட்டைப் பலிகொடுக்க நினக்கு விருப்பமில்லையாயின், அரிசிமாவினாற் கோழியொன்று செய்து, அந்த மாக் கோழியையேனுஞ் சண்டமாரிதேவிக்குப் பலிகொடுத்து வழிபாடு செய்வாயாக! அதனாற் சண்டமாரிதேவி மகிழ்ந்து திருவருள் செய்வாள்' என்றாள். தாயின் இறுதியுரையைக்கேட்ட மன்னவன், 'நாம் நம்முடைய மனைவியின் தீமையைப் புலப்படுத்த முயன்றது நமக்கே தீமையாக வந்து முடிந்துவிட்டது' என்று வருந்தினான். வருகிற தீமையை யாரானும் மாற்றமுடியாதென்று மனந்தெளிந்தான். அவ்வாறே செய்வதாகத் தாயிடம் மொழிந்தான்.

மாக்கோழி கூவியிறத்தல்

சந்திரமதியின் எண்ணப்படி மாவினாற் கோழியொன்று செய்யப்பட்டது. தன் தாயையும் அழைத்துக் கொண்டு சண்டமாரி கோயிலையடைந்தான். அரசன். சண்டமாரிக்குச் செய்யப்பெறவேண்டிய சிறப்புக்களும் வழிபாடுகளுஞ் செய்யப்பட்டன. அரசன் தன் கைவாட் படையால் மாக்கோழியின் தலையை வெட்டித் தள்ளினான். 'தேவியே! இப்பலியை ஏற்றுக்கொண்டு அருள் புரிவாயாக' என்று வேண்டினான். மாக்கோழியின் தலை வெட்டப்பட்டபோது அது துள்ளியோடியது; அரச

னுக்கு அண்மையில் விழுந்தது; உடல் குலுங்குமாறு கூவியிறந்தது. அரசன் தன் கைவாளைக் கீழேபோட்டு விட்டு வருந்தினன். அரண்மனையை அடைந்தான்.

அரசன் துறவுகொள்ள எண்ணுதல்

யசோதர மன்னன் தன் அரசினைத் தன் மகனாகிய யசோமதியின்பால் விட்டுவிட்டுத் தான் துறவினை மேற்கொள்ள எண்ணினன். அவ்வெண்ணத்தை அனைவருக்கும் புலப்படுத்தினன். அரசன் எண்ணத்தை அறிந்தாள் அமிர்தமதி. அரசன் துறவினை மேற்கொள்வதற்கு முன் அரசனையும் அவனுடைய தாயையுங் கொன்றொழிக்க வேண்டுமென்று எண்ணினள்.

அமிர்தமதி தன் கணவனையும் மாமியையும் நயவஞ்சகமாக விருந்துக்கழைத்து நஞ்சூட்டிக் கொன்றுவிடுவதென்று முடிவுசெய்தாள். தான் அரசனுக்கு விருந்தளிக்க விரும்புவதாகவும், அவ்விருந்துக்கு வரவேண்டுமென்றும் அரசனுக்குச் செய்தி சொல்லியனுப்பினள். அரசனுஞ் சந்திரமதியும் அமிர்தமதிசெய்த விருந்துக்கு வந்தார்கள். அமிர்தமதியாகிய தீயவள், தனக்கும் தன் மகன் யசோமதிக்கும் நஞ்சு கலவாத நல்ல உணவுகளைப் படைத்துக்கொண்டு அரசனுக்குஞ் சந்திரமதிக்கும் நஞ்சுகலந்த உணவினைப் படைக்கச்செய்தாள். நஞ்சு கலந்த உணவினையுண்ட அரசனும் அவன் தாயும் இறந்தார்கள்.

மக்கள் பேச்சு

அரண்மனைப் பணியாளர்களும் பிறரும், அரசனும் அவன் தாயும் இறந்தொழிந்ததைக்கண்டு வருந்தினர்கள். அமிர்தமதியின் தீய ஒழுக்கத்தை உணர்ந்திருந்த சிலர், 'இப்பொழுது இந்தக் கொடியவள் அரசனையும்

அவன் தாயையும் கொன்றுவிட்டாள்' என்று இகழ்ந் துரைத்தார்கள். மற்றுஞ் சிலர், அரசனும் அவனுடைய தாயும் மாக்கோழியைப் பலியிட்ட தீவினையால் இவ் வாறு தீச்சாவுக்கு உள்ளானார்களென்று கூறிக்கொண் டார்கள். அரசன் சிற்றின்பத்தில் மிகுந்த பற்றுள்ளங் கொண்டிருந்தபடியால், இவ்வாறு வீணே இறந்தொழிந் தான் என்று எண்ணினார்கள் பலர்.

அமிர்தமதி தன் மகனை அரசனாக்குதல்

அமிர்தமதியாகிய அரக்கி, தன் மாமியும் கணவ னும் இறந்தமைக்காக வருத்தப்படுவதுபோல வெளிக்கு நடித்தாள். தன் மகனாகிய யசோமதியைப் பார்த்து, 'நின் தந்தை இறந்தமைக்காக நீ வருத்தமுறாதே. இனிமேல் நீயே அரசனாவாய்' என்று கூறினாள். யசோமதியுந் தன் னுடைய தாயின் கட்டளைப்படி முடிசூடிக்கொண்டு அரசாட்சி செய்யலானான்.

3. யசோதரனும் சந்திரமதியும் பற்பல பிறவிகள் எடுத்தல்

யசோதரன் மயிலாகப் பிறத்தல்

அமிர்தமதியால் நஞ்சூட்டிக் கொல்லப்பட்ட யசோதரனும் சந்திரமதியும், மாக்கோழியைப் பலியிட்ட தீவினையினாலே, பல பிறவிகளையெடுத்துப் பலவாறு வருந்தலானார்கள். யசோதரன் விந்தமலையினிடத்தே வாழ்ந்த ஒரு மயிலின் வயிற்றிற்சென்று மயிற் பிறவியையெடுத்து முட்டையிலிருந்தான். அப்பொழுது வேடன் ஒருவன் வேட்டைக்கு வந்தான். ஓர் அம்பை எய்து மயிலைக் கொன்றான். அம்புபட்ட வழியாக மயிலின் வயிற்றிலிருந்த முட்டை வெளிப்பட்டது. அம் முட்டையை வேடன் எடுத்துக்கொண்டு சென்றான். வேட்டுவச்சியின் கையிலே கொடுத்து, 'இது மயிலினுடைய முட்டை. இதனை கோழி முட்டைகளோடு வைத்துக் குஞ்சு பொரிக்கச்செய்து வளர்ப்பாயாக' என்று கொடுத்தான். அவளும் அவ்வாறே செய்தாள். முட்டையினின்றும் யசோதரனாகிய மயில் வெளிப்பட்டு வளர்ந்துகொண்டிருந்தது.

சந்திரமதி நாயாகப் பிறத்தல்

யசோதர மன்னனின் தாயாகிய சந்திரமதி, உஞ்சயினி நகரத்தின் புறச்சேரி ஒன்றில் நாயாகப்பிறந்து வளர்ந்துகொண்டிருந்தாள்.

மயிலும் நாயும் மன்னன் மாளிகையில் வளர்தல்

சின்னாள்களுக்குப்பின்னர் மயிலை வளர்த்த வேட்டுவனும், நாயை வளர்த்தவனும், மயிலையும் நாயையும்

யசோமதி மன்னனுக்குக் காணிக்கைப் பொருளாகக் கொண்டுவந்து கொடுத்தனர். அவை இரண்டும் அரண் மனையில் வளர்ந்துகொண்டிருந்தன.

மயில் அட்டபங்கன் கண்ணைப் பிடுங்குதல்

ஒருநாள் மயில் அரண்மனையிற் சுற்றிக்கொண்டு திரிந்தது. ஓரழகிய மண்டபத்தின் பக்கத்திலே அமிர்த மதியும் அட்டபங்கனுங் களவொழுக்கத்திலே ஈடுபட்டிருந்தனர். முன்னைப் பிறப்புணர்ச்சியுடன் இருந்த மயில் அதனைக் கண்டது. அதற்கு மிகுந்த சீற்றம் உண்டாகியது. அது திடீரென்று பாய்ந்து, அட்டபங்கனுடைய கண்களைத் தன்னுடைய கூரிய அலகினாலே குத்தித் தோண்டிப் பிடுங்கிவிட்டது.

மயிலும் நாயும் மாளுதல்

மயிலின் செய்கையைக்கண்ட அமிர்தமதி, தன் காதலனுக்கு நேர்ந்த துன்பத்தைக்கண்டு கலங்கினாள். ஒரு கல்லையெடுத்து மயிலை ஓங்கியடித்தாள். கல் மயிலின் மண்டையிற்பட்டுத் தாக்கியது. அதனால் அது தளர்ந்து விழுந்தது. அப்பக்கத்திற் சுற்றிக்கொண்டிருந்த சந்திரமதியாகிய நாய், மயில் வீழ்ந்ததைக்கண்டு ஓடிவந்தது. வீழ்ந்துகிடந்த மயிலைத் தன் வாயினாலே பற்றி உதறியது. அவ்வாறு உதறவே மயிலுக்குச் சிறிது இருந்த உயிரும்போய் அஃது இறந்துவிட்டது. அமிர்தமதியாகிய கள்ளி, 'நாய் மயிலைக் கடித்துக் கொன்றுவிட்டது' என்று தன் மகன் யசோமதிக்குச் செய்தியனுப்பினாள். அப்போது யசோமதி சூதாடிக் கொண்டிருந்தான். அவன் சினத்துடன் எழுந்து ஓடிவந்தான். நாயைச் சூதுப்பலகையால் ஓங்கியடித்தான். அவ்வடியினால் நாயும் இறந்துவிட்டது.

முள்ளம்பன்றியாகவும் கரும்பாம்பாகவும் பிறத்தல்

மயிலாகப் பிறந்திருந்த யசோதரன், அடுத்தபடி விந்தியமலைக் காட்டில் முள்ளம்பன்றியாகப் பிறந்தான். நாயாகப் பிறந்திருந்த சந்திரமதி அவ்விந்தியமலைக் காட்டிலேயே கரும்பாம்பாகப் பிறந்தாள். முள்ளம் பன்றி ஒருநாள் பசித்தீ மிகுதியால், அக்கரும்பாம்பைத் துண்டுதுண்டாகக் கிழித்துக் கொன்று தின்றுவிட்டது. அந்த யசோதர முள்ளம்பன்றியைக் கரடியொன்று கொன்றுவிட்டது.

மீனாகவும் முதலையாகவும் பிறத்தல்

மயிலாகவும் முள்ளம்பன்றியாகவும் பிறந்த யசோ தரன் மூன்றாவதாகச் சிருப்பிரை என்னும் ஆற்றில் உலோகிதம் என்னும் பெயரையுடைய மீனாகப் பிறந் தான். கரும்பாம்பாகப்பிறந்த சந்திரமதி அவ்வாற்றி னுள்ளேயே முதலையாகப் பிறந்தாள்.

முதலை கொல்லப் பெறுதல்

அரசனுடைய அந்தப்புரத்தில் பணிபுரியும் கூனி ஒருத்தி, ஒருநாள் அவ்வாற்றிலே நீராடினாள். பசியால் வாடித்திரிந்த முதலை அக்கூனியை விழுங்கிவிட்டது. முதலை கூனியை விழுங்கிய செய்தியை அரசன் அறிந் தான். அம்முதலையைப் பிடித்துக் கொல்லுமாறு வலைஞர்கட்குக் கட்டளையிட்டான். வலைஞர்கள் அம் முதலையைப் பிடித்தார்கள். இருப்புநாராசத்தைப் பழுக்கக் காய்ச்சி அம்முதலையின் உடலுக்குட் செலுத்தி னார்கள். கொலைஞர்கள் வாளாற் பிளந்தார்கள். சிலர் கத்தியால் வெட்டினார்கள். பலவாறு துன்புறுத்தி அம்முதலை கொல்லப்பட்டது. பிறகு அந்நகரில்தானே பெண்ணாடாகப் பிறந்து வளர்ந்தது.

உலோகித மீன்

சந்திரமதியாகிய முதலையின் கதை அவ்வாருக, அவ்வாற்றில் தோன்றிய யசோதரனுகிய உலோகிதமீன், வலைஞர்களுடைய வலையுட்சிக்கியது. அப்பொழுது அங்குச் சென்ற சிலதீவினையாளர்கள் அம்மீனைக் கண்டனர். அவர்கள் அரசனிடஞ்சென்று, வலைஞர்களுடைய வலையில் அகப்பட்டுள்ள மீன் முன்னோர்களின் இறந்த நாட்கடனுக்கு (சிரார்த்தத்திற்கு) ஆகுமென்றனர். அரசன் அந்த மீனைத் தீவினையாளர் விருப்பப்படி, தன் தந்தையின் (யசோதரன்—உலோகிதமீன்) இறந்தநாட்கடனுக்குத் தருவித்து, அறுத்துச் சமைக்குமாறு பணித்தான். அம்மீனும் அவ்வாறே சமைக்கப்பட்டது. தீவினையாளர்களாகிய பார்ப்பனமாக்கள் அம் மீன்கறியைத் தின்று மன்னனை வாழ்த்திச்சென்றனர்.

யசோதரன் ஆடாகப் பிறத்தல்

தன் இறந்தநாட்கடனுக்காக அறுத்துக் கொல்லப்பட்ட யசோதரன் நான்காவதாகத் தன் தாயாகிய ஆட்டின்வயிற்றில் ஆண் ஆடாகப் பிறந்தான். நன்கு வளர்ந்தபிறகு மற்ருேர் ஆட்டுக்கடா யசோதர ஆட்டுக்கடாவைப் பாய்ந்து முட்டியது. அதனுல் யசோதர ஆடு இறந்தது.

யசோதரன் மீண்டும் ஆடாகப் பிறத்தல்

இறந்த யசோதரஆடு தான் சேர்ந்த தாய்ஆட்டின் சூலிலே தானே சென்றுவளரத் தொடங்கியது. அவ்வாறிருக்கும் நாளிலே, ஒருநாள் யசோமதிமன்னன் வேட்டையாடக் காட்டிற்குச் சென்ருன். வேட்டையாடிவிட்டு மீண்டான். நகர்ப்புறத்துச் சேரியிலே சந்திரமதியாடு மேய்ந்துகொண்டுநின்றது. யசோமதி

மன்னன் ஏவலினாலே அவ்வாட்டைக் கொன்றான். யசோதரனாகிய ஆட்டுக்குட்டி வெளிப்பட்டது. ஆட்டை வளர்த்தவன் தன் ஆடு கொல்லப்பட்டதைக் கண்டு வருந்தினான். யசோமதிமன்னன் இறந்த ஆட்டினின்றும் வெளிப்பட்ட குட்டியை அந்த ஆட்டை வளர்த்தவனையே வளர்க்குமாறு கூறிவிட்டு நகருக்குத் திரும்பினான். அந்த ஆட்டை வளர்த்தவன் ஒரு புலையனாவான்.

யசோமதி வேட்டை

மற்றொரு நாள் யசோமதி மன்னன் வேட்டைக்குச் சென்றான். பல உயிர்களைக் கொன்றான். அவ்வேட்டையில் நன்கு கொழுத்த ஓர் எருமையும் இருந்தது. அந்தக் கொழுத்த எருமையினைப் பார்ப்பனர் கண்டனர். அதனைத் தின்று மகிழ எண்ணினர். அரசனிடஞ் சென்று, அந்த எருமை இறந்தநாட்கடன் புரிவதற்கு ஏற்றதாகும் என்றனர். அரசனும் அந்த எருமையைக் கொண்டு இறந்தநாட்கடனைப்புரியக் கட்டளையிட்டான். அப்போது முன்பு புலையனை வளர்க்குமாறு கூறி விடப்பட்ட ஆடும் அங்குக் கொண்டுவரப்பட்டது. பார்ப்பனர்கள் எருமையூனைத் தின்றுவிட்டு, 'யசோதரனும் சந்திரமதியும் தேவருலகில் இனிது வாழ்க' என்று வாழ்த்துக் கூறிச்சென்றனர்.

பழம்பிறப்புணர்ந்து வேறோராடாகப் பிறத்தல்

புலையனிடம் இருந்து அங்குக் கொண்டுவரப்பட்ட ஆடு, தன் பழம்பிறப்பு வரலாறுகளை ஒருவாறுணர்ந்தது. மாக்கோழியைப் பலியிட்டதனால் தனக்கு அன்றுவரை நேர்ந்த கேடுகளையெல்லாம் எண்ணி எண்ணி வருந்தியது. பார்ப்பனர்கள் ஊனைத்தின்றுவிட்டு, வீணாக வாழ்த்துரைகூறிச் செல்லுதலைக்கண்டு


நொந்தது. மேலும், 'இஃது என்னுடைய ஊர்; இஃது என்னுடைய அரண்மனை; இவைகளெல்லாம் என்னுடைய பொருள்கள்; இவர்களெல்லாரும் என்னுடைய பணியாளர்கள்; யானோ இவ்விடத்தில் ஆடாகவந்து இவ்வாறு நிற்கும்படியாக நேரிட்டிருக்கிறது' என்று எண்ணிப் பலவாறு வருந்தியது. அஃது உடனே மீண்டும்வேறோர் ஆட்டுடலை யெடுத்தது.

சந்திரமதி எருமையாகப் பிறத்தல்

நாய், கரும்பாம்பு, முதலை, ஆடு ஆகியவற்றின் உடலையெடுத்து வருந்திய சந்திரமதி, பிறகு கலிங்க நாட்டிலே எருமை மாடாகப் பிறந்தாள். சந்திரமதியாகிய எருமை வணிகர்க்கு மூட்டை சுமந்துகொண்டு வணிகருடன் உஞ்சயினிக்குவந்தது. வணிகர்கள் நகரின் புறத்திலுள்ள சிருப்பிரையாற்றின்கரையில் தங்கினர். மூட்டை தூக்கிவந்த எருமை, நீண்டநேரம் ஆற்றுநீரிற் கிடந்து புரண்டுவிட்டுக் கரையேறியது. அப்போது அங்கு யசோமதி மன்னனுடைய குதிரையொன்று மேய்ந்துகொண்டிருந்தது. எருமை அந்தக் குதிரையின் மேற்பாய்ந்து, அதனை முட்டிக் கொன்றுவிட்டது. குதிரை எருமையினாற் கொல்லப்பட்ட செய்தியைப் பணியாளர்கள் யசோமதி மன்னனுக்குச் சொன்னார்கள். மன்னன் வணிகர்களுடைய பொருள்களைப் பற்றிக் கொண்டு, அந்த எருமையையும் பிடித்துவருமாறு கட்டளையிட்டான்.

எருமையை வருத்திக் கொல்லுதல்

அரசனுடைய ஏவலாளர்கள் அவ்வாறே கொண்டு சென்றனர். அரசன் அவ்வெருமையைக் கொலைபுரியுமாறு கட்டளையிட்டான். வேலைக்காரர்கள் அவ்



எருமை குதிரையை முட்டிக் கொன்றது

[பக்கம் 26]

வெருமையின் நான்கு கால்களையும் கட்டினர். கண், காது, கொம்பு, வால் முதலியவைகளை அறுத்து வருத்தினர். இறுதியிற் கொன்று முடித்துப் பக்குவமாகச் சமைத்தனர். அவ்வெருமையூனை அமிர்தமதி நன்ருகத் தின்று மகிழ்ந்தாள். மேலும் ஆட்டுக்கறி யுண்பதற்கும் விரும்பினுள். அமிர்தமதியின் கொடுஞ்செயலைக் கண்டோர் அனைவரும் அவளை இகழ்ந்து தூற்றினர்.

அமிர்தமதி குட்டநோய் அடைதல்

அட்டபங்கன் குட்டநோய் உள்ளவன். அந்நோய் அமிர்தமதியையும் விரைந்து பற்றியது. அதனுல் அவள் பலவாறு வருந்தி நொந்து காலங்கழித்தாள். அமிர்தமதி விரும்பியவாறு யசோதர ஆட்டைஅடித்து அவளுக்குச் சமைத்துப்போட்டனர்.

கோழிப் பிறப்பெடுத்தல்

சந்திரமதியும் யசோதரனும் அந்நகரத்துக்குப் புறத்தேயுள்ள சேரியில், கோழியாகப் பிறந்து வளர்ந்தனர். அக்கோழிகள் மிக அழகாக இருப்பதாக எங்குஞ் செய்தி பரவியது. யசோமதி மன்னன் அக்கோழிகளைத் தன்னரண்மனைக்குக் கொண்டுவருமாறு செய்தான். அக்கோழிகளைப் பாதுகாப்பாக வளர்க்குமாறு சண்டகருமனை யேற்படுத்தினுன். அக்கோழிகளை அழகிய கூட்டிலிட்டுச் சண்டகருமன் வளர்த்தான்.

4. அகம்பனர் அறவுரையும் இரட்டைப்பிள்ளைகளும்

வேனிற்காலம்

யசோதர மன்னனும் சந்திரமதியும் கோழியாகப் பிறந்து வளர்ந்துகொண்டிருக்கும் நாளையில், வேனிற் காலம் வந்தது. யசோமதிமன்னன் களிப்பொடுபொழுது போக்க எண்ணினன். தன் பட்டத்தரசி புட்பாவலி யோடு பூம்பொழிலையடைந்தான்; மண்டபத்தில் இன்பத் தோடு இனிது அமர்ந்திருந்தான். நாடகமகளிர் கூத் தியற்றினர்; பாடல் மகளிர் இன்னிசை பாடினர். அவை களைக் கண்டும் கேட்டும் அரசன் மகிழ்ந்திருந்தான்.

அருளுரை பெறுதல்

யசோமதிமன்னன் இவ்வாறு இன்புற்றிருக்கையில், அரசனாற் கோழியை வளர்க்குமாறு கட்டளையிடப் பெற்ற சண்டகருமன், பொழிலை யடுத்திருந்த காட்டிற் குச்சென்று, வேட்டையாடிக்கொண்டு திரிந்தான். அக் காட்டில் அகம்பனர் என்னும் முனிவர் தவஞ்செய்து கொண்டிருந்தார். சண்டகருமன் அம்முனிவரைக்கண்டு வணங்கினின்றான். யோகத்தில் அமர்ந்திருந்த முனிவர் கண்விழித்துச் சண்டகருமனைப் பார்த்தார். சண்ட கருமன் மீண்டும் அகம்பன முனிவரைப் பணிந்து, 'அடிகாள்! தாங்கள் யோகத்தாற்கண்ட முடிவான மெய்ப்பொருள் யாது? அதனை எனக்குக் கூறியருள வேண்டு'மென்று வேண்டிக்கொண்டான். அகம்பன முனிவர் சண்டகருமனுக்கு அருள்செய்ய எண்ணினர் கடையிலா அறிவு, கடையிலாக் காட்சி, கடையிலா வீரியம், கடையிலா இன்பம் முதலிய மெய்ப்பொருள் களை விளக்கமாக விரித்துரைத்தார்.

சண்டகருமன், 'உயிர் எத்தன்மைத்து? அதனை உடலிற் காணமுடியவில்லையே' என்று கேட்டான். உயிரின் நுட்பத்தன்மையை முனிவர் விளக்கியருளினார். நல்லறிவு நல்லொழுக்கம் முதலியவற்றையும் விளக்கி அவற்றின் பயனையுங் கூறினார். கொலைபுரியுங் கொடுங் குணத்தை நீக்குவதால் விளையுஞ் சிறப்பையுரைத்தார்.

சண்டகருமன், 'கொலைசெய்யுஞ் செயலை என்னால் நீக்குதல் இயலாது. மற்றவைகளைக் கடைப்பிடித் தொழுகுகிறேன்' என்றான்.

அகம்பன முனிவர், 'கொல்லாமையே அறங்களுக் கெல்லாம் தலைமையாய சிறப்புடைய'தென்று கூறி, அதனை மேற்கொள்ளுமாறு வற்புறுத்தினார். மேலும், 'யசோமதி மன்னன் தந்தையாகிய யசோதரனும், அவன் தாயாகிய சந்திரமதியும், மாக்கோழிசெய்து பலியிட்ட தன்பலனாகப், பலபிறப்பெடுத்து வருந்தியுழன்று, இறுதி யிற் கோழிப்பிறப்பை யெடுத்து, இதோ உனதுகூட்டின் கண் இருப்பதையும் பார்ப்பாயாக! மாக்கோழிக்கு உயி ரில்லையேனும், உயிர்க்கொலை செய்வதாக எண்ணிச் செய்தமையாலேயே எல்லாத் தீமைகளையும் அடைந் தார்கள். உயிர்க்கொலை புரிபவர்கள் நிரயத்திற்குச் சென்று துன்புறுவதுதப்பாது' என்றார். சண்டகருமன் நல்லுணர்வு பெற்றான். உயிர்க்கொலையையும் விட்டு விடுகிறேனென்று கூறினான். முனிவரை வணங்கி விடைபெற்றுக்கொண்டு திரும்பினான்.

அரசன் கோழிகளைக் கொல்லுதல்

சண்டகருமனுடைய கூட்டிலிருந்த கோழிகள் முனிவரின் அறவுரைகளைக்கேட்டுக் களிப்படைந்தன. தம்முடைய பிறப்பின் வரலாற்றையும் உணர்ந்தன.

இனிமேல் நற்கதி பெறலாம் என்னும் எண்ணத்துடன் மகிழ்ச்சிமிகுந்து கூவின. கோழிகள் பெருங்குரலெடுத்துக் கூவியஒலி, இன்பக்கடலில் திளைத்திருந்த அரசனுடைய காதுகளிற்சென்று விழுந்தது. ஆங்கிருந்த மகளிர், அவ்வொலியைக் கேட்டு மருண்டனர். அரசன் அவ்வொலியைக் கேட்டுச் சினங்கொண்டான். தன் வில்லை வளைத்துக் குறிபார்த்து, அக்கோழிகள்மீது கணையொன்றைச் செலுத்தினான். அதனால் அக்கோழிகள் இறந்துவிழுந்தன. அரசன் தன்னுடைய கூட்டத்தோடு அரண்மனையை அடைந்தான்.

புட்பாவலி இரட்டைப் பிள்ளைகளைப் பெறுதல்


முனிவரின் அறவுரையைக் கேட்ட கோழிகள், அதனால் மிகுந்த நல்வினையை அடைந்தன. யசோமதி மன்னன்மனைவியாகிய புட்பாவலியின் வயிற்றிற்சென்று, இரட்டைப் பிள்ளைகளாகக் கருக்கொண்டன. காலம் நிறைந்தபின்பு, புட்பாவலி இரட்டைப் பிள்ளைகளைப் பெற்றாள். அப்பிள்ளைகள் பிறந்து சிலஆண்டுகள் சென்றபின், புட்பாவலி மற்றுமோர் ஆண்குழந்தையைப் பெற்றாள்.

யசோமதிமன்னன், இரட்டைப் பிள்ளைகளில் ஆணுக்கு அபயருசி என்று பெயரிட்டான். பெண்ணுக்கு அபயமதி என்று பெயரிட்டான். பின்னர்ப் பிறந்த பிள்ளைக்கு யசோதரன் என்று பெயரிட்டான். மக்கள் மூவரும் மாண்புடன் வளர்ந்துகொண்டிருந்தனர்.

5. யசோமதி, அபயருசி, அபயமதி துறவும் மாரிதத்தன் மனமாற்றமும்

யசோமதி வேட்டையாடச் செல்லுதல்

ஒருநாள் யசோமதிமன்னன் வேட்டை யாடும் பொருட்டு, வேட்டைப் படைகளுடன் காட்டுக்குச் சென்றான். விலங்குகளைப் பிடித்தற்கு வலைகள் நாய்கள் முதலியன அவனுடன் கொண்டுசெல்லப் பட்டன. சுதத்தமுனிவர் என்னும் பெரியார் தவஞ் செய்துகொண்டிருந்த காட்டை, அடைந்தான். பகல்முழுவதுஞ் சுற்றியலைந்தான். அவனுடைய வேட்டைக்கு எத்தகைய விலங்குகளும் அகப்பட வில்லை. அதற்குக் காரணம் சுதத்தமுனிவர் தவஞ் செய்துகொண்டிருப்பதுதான் என்று,யசோமதிமன்னன் எண்ணினான். அம்முனிவர்மேல் மன்னனுக்கு முனிவு உண்டாயிற்று. அறிவின்மையின் மிகுதியால் இன்ப போகங்களில் இனிது மூழ்கிய மன்னன் நன்மைதீமை களைப் பகுத்தறியும் ஆற்றல் அற்றவனாக இருந்தான். முனிவரின் பெருமையை அரசன் சிறிதும் உணரவில்லை. முனிவருக்குத் தீங்கு செய்யவேண்டும் என்னும் நோக் கத்துடன் முனிவரை நெருங்கினான். கொலைபுரியக் கூடிய வேட்டைநாய்கள் ஐந்நூற்றை முனிவர்மீது ஏவினான். அந்நாய்கள் முனிவருடைய யோகப்பெருமை யால் தோற்கடிக்கப் பெற்றன. அவைகள் முனிவரை நெருங்கமுடியாமல் ஒரு வில்லளவு தொலைவிலேயே நின்றுவிட்டன. அரசன் அப்பொழுதும் முனிவருடைய பெருமையை உணர்ந்துகொள்ளவில்லை. மேலுஞ் சினங்கொண்டு முனிவரைக் கொலைசெய்ய வாளை யுருவினான்.



கலியாணமித்திரன் அரசனைத் தடுத்தல்.

கலியாணமித்திரன் அரசனைத்தடுத்தல்

யசோமதிமன்னனுக்குக் கலியாணமித்திரன் என்னும் பெயருடைய ஒருநண்பன் இருந்தான். அவன் அப்போது அரசனுடன் இருந்தான். அவன் அரசனைப் பார்த்து, 'ஓ அரசனே! அரசபோகத்தைத் துறந்து துறவறமாகிய பெருமலையைத் தாங்கிக்கொண்டிருக்கின்றார் இம்முனிவர். நீ இம்முனிவரைப் போற்றி வழிபடாமல்; அவரைக்கொலைபுரிதற்கு எண்ணுகிறாயே அதற்குக் காரணம்யாது? இம்முனிவர் பெருமானுடைய பெருமை இயம்புதற் கரியது. இவர் ஒன்றினை ஆக்குதற்கும் அழித்தற்கும்வல்லவராவார். இம்முனிவருடைய திருவடிகளை உண்மையான அன்புடன் அடைந்தவர்கள் இந்திரசெல்வத்தை எய்துவார்கள். அறிவின்மையினால் இவருக்குத் தீமை புரிபவர்கள் இருளுலகத்தை யடைவார்கள். இம்முனிவர் ஒருவர்பால் விருப்பும், ஒருவர்பால் வெறுப்பும் உடையவர் அல்லர். நன்மை தீமைகளையும் ஒருபொருட் படுத்துவரல்லர். ஆகையால் நீ இம்முனிவரைப் பணிந்துவழிபட்டு நன்மையைப் பெறுவாயாக' என்று கூறினான்.

சுதத்தமுனிவரின் வரலாறு கூறுதல்

நண்பனாகிய கலியாணமித்திரன் உரையைக்கேட்ட யசோமதிமன்னன் சினம் அடங்கினான். 'இம்முனிவர் யார்? இவருடைய வரலாறுயாது?' என்றுகேட்டான். கலியாணமித்திரன் அரசனைப் பார்த்து, 'இம்முனிவர் கங்கைகுலத்திற் பிறந்தவர். கலிங்கநாட்டிற்கு அரசனாகஇருந்தவர். அருந்திறலோடு விளங்கியிருந்த பெருந்தகையினர். உலகவாழ்க்கை பொய்ம்மை யுடைய தென்பதை நன்குணர்ந்து, நாடுநகரங்களையும் பிற

செல்வங்களையுந் துறந்தவர்; நாடுகாடு எங்குந் திரிப வர்; மெய்யறிவாகிய நன்கலனையே அணியாகத் தாங்கி யவர்; இவருடைய யோகத்தின் பெருமை மிகவும் அரியது; நீ இம்முனிவரைக் கண்டபடியால் உனது தீவினைகளெல்லாம் நீங்கின. நீயேவிய நாய்கள் இம் முனிவரை நெருங்காத தன்மை ஒன்றைக்கொண்டே, இவருடைய பெருமையை நன்குணர்ந்து கொள்வாயாக' என்று கூறினான்.

தலையை அரிந்து முனிவர் திருவடியில் வைக்க எண்ணுதல்

யசோமதிமன்னன் தன்னுடைய பிழையை நன் குணர்ந்தான். தான் அம்முனிவர்க்குத் தீமைசெய்ய நினைந்ததைக் குறித்துவருந்தினான். தன் தலையை வெட்டி முனிவர் திருவடியில் வைக்கஎண்ணினான். யசோமதிமன்னன் எண்ணத்தை யுணர்ந்த கலியாண மித்திரன் அவ்வாறு செய்யவேண்டாமென்று தடுத் தான். 'உலகத்துயிர்களை யெல்லாங் காத்தற் கடன் பூண்ட அரசன் தன் இன்னுயிரைப் போக்கிக்கொள்வது தக்கதாகாது. முன்னர் ஏற்பட்ட தீவினைகளோடு மேலுந் தீவினைகளைத் தேடிக்கொள்வது அறிவுடைமை யன்று' என்றான்.

மன்னன் முனிவரைப் போற்றுதல்

யசோமதிமன்னன் சுதத்தமுனிவரைப் பணிந்து போற்றினான். தன் முன்னோரடைந்த பிறப்புவரலாறு களை உரைத்தருள வேண்டுமென்று வேண்டிக்கொண் டான். முனிவர் அசோகனுடைய பிறப்பு, அமிர்தமதி யினுடைய நிரயவகை முதலியவைகளைக் கூறலானார்.

அமிர்தமதி நிரயத்தில் வருந்துதல்

தீய ஒழுக்கத்தை மேற்கொண்டு, தன் தலைவனை யும் மாமியையும் நஞ்சூட்டிக்கொன்ற அமிர்தமதி தூமப்

பிரபை என்னும் அளற்றில் வீழ்ந்து வருந்தினள். அந் நிரயம் மிகுந்த வெப்ப முடையது. மேருமலையைக்கூடத் தனதுவெப்பத்தின் மிகுதியால் உருக்கிவிடுந் தன்மை பொருந்தியது. நிரயமள்ளர்கள் அமிர்தமதியைப் பல வாறு வருத்தினார்கள். அடித்து உதைத்து மிதித்தார் கள். தீயிலிட்டுச் சுட்டார்கள். உடல்முழுவதும் புண்ணுகுமாறு வாளால் வெட்டினார்கள். பெருந்தடி யால் அடித்தார்கள். ஊனைச் சுட்டுத்தின்றவாயிலே நெருப்பில்வெந்து கொதிக்குஞ் செப்புத்துண்டங்களை யெடுத்துத் திணித்தார்கள். அச்செப்புத்துண்டத்தின் வெப்பம் மிகுதியால் அவளுடைய முகம்வெந்து நீரா யுருகுவதாயிற்று. செப்பினாலாகிய பாவை யொன்றினை மிகுந்த தீயிலே இட்டுக் காயவைத்தனர். அஃது உரு கக்கூடிய நிலைமையி லிருந்தபோது அதனைத் தழுவுமாறு செய்தனர். அதனால் அமிர்தமதியினுடைய உடலங் கரிந்துபொரிந்தது நஞ்சினை மிகுதியாக உண்ணச் செய்தனர். அவள் துடித்துத்துடித்து வருந்துமாறு அவளுடைய உறுப்புக்களை யறுத்து எதிரேவைத்தனர். 'முன்னே நீ, ஆடாகவும் மாடாகவும் பிறந்த நின்கணவன்மாமி ஆகியோருடைய ஊனைத் தின்றாயன்றோ? இப் போது இதனைத் தின்பாயாக' என்றுகூறி ஒறுத்தனர். செக்கிலிட்டு ஆட்டினர். உலைப்பானையில் ஏற்றி யுருக்கினர். கழுவிலே ஏற்றினர். இவ்வாறாக அவள் நெடுங் காலம் நிரயத்திலே கிடந்து வருந்தினாள்.

யசோதரனும் சந்திரமதியும்

யசோதரனும் அவனுடைய தாயாகிய சந்திரமதி யும் உயிர்ப்பலிக்கு ஒப்பாகக் கருதிச்செய்த கொலைக் கொடுமையால் பலதுன்பங்களை யடைந்தனர். யசோ தரன் மயிலாகவும் முள்ளம்பன்றியாகவும், மீனாகவும்

இருமுறை ஆடாகவும் இறுதியிற் கோழியாகவும் பிறந்தான். சந்திரமதி நாயாகவும் கரும்பாம்பாகவும் முதலையாகவும் ஆடாகவும் எருமை மாடாகவும் இறுதியிற் கோழியாகவும் பிறந்தாள். இவர்கள் இருவரும் இரட்டைப்பிள்ளைகளாக உனக்குத்தோன்றி, அபயருசி அபயமதி என்னும் பெயருடன் வளர்கின்றார்கள்' என்று கூறியருளினார்.

மன்னன் மனங்கலங்கி மக்களை யழைத்தல்

தன்முன்னோர்களின் பிறப்புவகைகளைக் கேள்வியுற்ற யசோமதிமன்னன் மனங்கலங்கினான் தன்னருகில் நின்ற சண்டகருமனைப் பார்த்து, மக்களிருவரையும் அழைத்துவருமாறு கட்டளையிட்டான். அம்மக்களும் முனிவரையடைந்து அவருடைய திருவடிகளை வணங்கினார்கள்.

மக்கள் முற்பிறப்புக்களையுணர்ந்து வருந்தல்

முனிவருடைய திருவருளால் மக்களிருவருக்கும் முற்பிறப்புக்களைப் பற்றிய வரலாறுகள் முழுதுந் தெரியலாயின முற்பிறப்பின் உணர்ச்சியால் இருவரும் மிகுந்த வருத்தத்தை யடைந்தார்கள். தாம்பட்ட வருத்தங்களையெண்ணி நொந்தார்கள். யசோமதிமன்னன் தன் மக்கள் படும் வருத்தத்தைக்கண்டு கலங்கினான்.

யசோமதிமன்னன் வருந்தல்

என் தந்தையாகிய யசோதரனும் பாட்டியாகிய சந்திரமதியும் எடுத்த பலபிறவிகளிலேயும் அவர்களுக்கு மிகுந்த துன்பத்தைச் செய்தேன்; அத்தீவினையின் பொருட்டு யான் யாதுசெய்வேன்? உயிர்களுக்கு அருளைச்செய்ய நினையாது, அவ்வுயிர்கட்கு மிகுந்த வருத்தத்

தினைச் செய்து அறிவற்றயான் இக்குற்றங்களின் பொருட்டு யாதுசெய்வேன் என்றான். மேலும் சுதத்த முனிவரைப்பார்த்து, 'மாவாற் செய்யப்பட்ட கோழியைக் கொன்றவர் அடைந்த துன்பம் இத்தன்மை யுடையதாகு மானல், எவற்றிற்கும் அஞ்சாது பல உயிர்க் கொலைகளைப் புரிந்த எனக்கு எத்தகைய துன்பம் உண்டாகுமோ? அடியேனுக்கு அருள்செய்தல் வேண்டும்' என்று கலங்கிவீழ்ந்து முனிவரை வேண்டினான்.

சுதத்தமுனிவர் அருளுதல்

'அறிவில்லாமலிருந்த காலத்திலே செய்ததீமைகளை நல்லறிவு உண்டானபொழுது விலக்கிவிடுதல் வேண்டும். நன்னெறிக்கண்ணே ஒழுகுதல்வேண்டும் பலநோன்பு களையும் புரிதல்வேண்டும். இவற்றால் பழைய தீவினை கள் நீங்கும். இறைவன் அருளிய அறநெறியின் மாண் பால் தேவருலக இன்பம் உண்டாகும்' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

பிழைகளைப் பொறுக்குமாறு மக்களை வேண்டிக்கொள்ளுதல்

யசோமதிமன்னன் தன் மக்களாகிய அபயருசியை யும் அபயமதியையும் பார்த்து, 'உங்களுடைய பல பிறவிகளிலும் உங்களை இன்னாரென்று உணர்ந்து கொள்ளாமல், நான் செய்த தீவினைகளையெல்லாம் பொறுத்தருள வேண்டுமென்றுவேண்டிக்கொண்டான்.

நண்பன் உதவியைப் போற்றுதல்

யசோமதிமன்னன் தன் நண்பனாகிய கலியாண மித்திரனைப்பார்த்து, 'எனதுயிருக்குப் பேரருள் புரிந்த சுதத்தமுனிவரோடு, நீ எனக்கு ஆசிரியனுவாய்' என்று பல இன்சொற்கள்கூறிப் போற்றினான்.

மன்னனும் மக்களும் துறவுகோள்ளுதல்

யசோமதிமன்னன் உள்ளம் துறவறத்தைநாடியது. அபயருசிக்கு முடிசூடித் தான் துறவறத்தை மேற்கொண்டான். பல அரசர்களும் கலியாணமித்திரனும் சுற்றத்தார்களும், யசோமதிமன்னனேடு தாங்களுந் துறவறத்தை மேற்கொண்டார்கள். அபயருசி அரச செல்வத்தை விரும்பவில்லை. அவன்மனமுந் துறவுகொள்ளலையே விரும்பியது. அவன் தன் தம்பி யசோதரனுக்கு முடிசூட்டிவிட்டுத் தானுந் துறவறத்தை மேற்கொண்டான். அபயமதியுந் தன் உடன்பிறந்தானேடு துறவறத்தை மேற்கொண்டுசென்ருள். இருவருங் காட்டையடைந்து சுதத்தமுனிவரின் மாணவர்களாகி அருளறங் கேட்கலானுர்கள். அம்முனிவரும் அவர்களை மாணவர்களாக ஏற்றுக்கொண்டு அருள்புரிந்தார். அம்முனிவர் தம்மாணவர்களோடு பின் நகர்ப்புறத்துச் சோலையிலேவந்து தங்கியருளினுர்.

தம்மைப் புலப்படுத்துதல்

சுதத்த முனிவர் உண்ணு நோன்புடையவர். அவர் யசோமதி மக்களாகிய அபயருசியையும் அபயமதியையும் பார்த்து, 'நீங்கள் உண்ணு நோன்பைத் தாங்கமாட்டீர்கள். ஊருக்குட் சென்று உணவு ஏற்று வருவீர்களாக' என்று கட்டளையிட்டருளினுர். அவர்களும் அவரை வணங்கி விடைபெற்றுக்கொண்டு இந்நகரத் தெருவுக்குள்ளே வந்தார்கள். அவ்வாறு வந்தவர்களாக எங்களை யறிவாயாக. மாவாற் செய்யப்பட்ட கோழியின் கொலை ஒரு குற்றமாக முடிந்து பிறவிதோறும் வருத்துமாயின், உண்மையான உயிர்க் கொலையினுல் ஏற்படுந் தீவினை எவ்வளவு பிறவியை யெடுத்தாலும்

நுகர்ந்து தொலையுமோ? உயிர்க் கொலையினால் ஏற்படும் பெருந் தீவினையை நோக்கித்தான் நாங்கள் இரங்கினோம்' என்று அபயருசி கூறி முடித்தான்.

மாரிதத்தன் மனந்தெளிதல்

அபயருசி கூறியவைகளையெல்லாங் கேட்ட மாரிதத்தன் மனந்தெளிந்தான். 'நீ அருளுடன் உரைத்தருளிய பேருரையால் நல்லறிவு பெற்றேன். உயிர்க் கொலையாகிய தீவினையில் அகப்பட்டுக்கொண்டு தொல்லைப்படும் பெருந் துன்பத்தினின்றும் நீங்கினேன். நான் இதுவரை செய்த தீவினைகள் நீங்குதற்பொருட்டுத் துறவறத்தை மேற்கொள்ள உறுதிசெய்து கொண்டேன்' என்றான்.

மாரிதத்தன் துறவு

மாரிதத்தன் மாதர்களையும் மற்றையோர்களையும் நெருப்பென்று அஞ்சினான். தன் மகன் புட்பதந்தனுக்கு முடிசூட்டினான். அபயருசி அபயமதி இருவருடனும் புறப்பட்டான். சோலைக்கண் எழுந்தருளியிருந்த சுதத்தமுனிவரையடைந்து வணங்கினான். அம்முனிவர்பால் அருளுரையைப் பெற்று மாரிதத்த முனிவனானான். முனிவனானவன் பின்னர்த் தேவனுமாகிச் சிறப்பையடைந்தான்.

அபயருசியும் அபயமதியும் தேவராதல்

அபயருசியும் அபயமதியும் சுதத்த முனிவர் அடியையே பற்றி ஒழுகினார்கள். தேவயாக்கையைப் பெற்ற அவர்கள் தேவருலக இன்பத்தில் திளைத்து மகிழ்ந்திருந்தார்கள்.

நீதிகளும் பயிற்சிகளும்

இந்தக் காவியக்கதை விளக்கும் நீதிகள்.

1. கொலை வினையை உள்ளத்தினால் எண்ணுதலுந் தீது.
2. ஊனை உண்ணுதல் கூடாது.
3. ஒரு பிறவிக்கண் புரிந்த தீவினை, பல பிறவிகளினுந் தொடர்ந்து வருத்தும்.
4. எத்தகைய குற்றம் புரியினும் மாதர்களைக் கொலை புரிதல் கூடாது.
5. ஒருவருடைய தீய நடத்தைக்கு இம்மையில் தண்டனை கிடைக்காவிட்டாலும் மறுமையிற் கட்டாயங் கிடைத்தே தீரும்.
6. தவத்தினருடைய ஆற்றலுக்கு முன் அரசனுடைய ஆற்றலுந் தோல்வியுறும்.
7. தீவினைப்பயன் நுகராமல் தொலையாது.

ஒவ்வொன்றைப் பற்றியும் பதினைந்து வரிகள் எழுது.

1. மாரிதத்தன் மக்கட்பலியிட எண்ணுதல்.
2. தாய் பலி கொடுக்குமாறு கூறியதைக் கேட்டு யசோதர மன்னன் மறுமொழி கூறுதல்.
3. அகம்பன முனிவரின் அருளுரை.
4. சுதத்த முனிவருடைய வரலாறு.
5. அமிர்தமதி நிரயத்தில் வருந்துதல்.
6. யசோமதி மன்னன் வேட்டை நாய்களை முனிவர்மேல் ஏவுதல்.

சிறு குறிப்புகள் எழுதுக.

மாரிதத்தன், சண்டமாரி, சண்டகருமன், அட்டபங்கன், உலோகிதமீன், யசோமதி மன்னன், கலியாணமித்திரன், அகம்பன முனிவர்

அறநெறி

ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக
போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக
நோக்குவது ஏதெனில் ஞானம் நோக்குக
காக்குவது ஏதெனில் விரதம் காக்கவே.

—யசோதர காவியம்.

கழகவெளியீடு—௬கக

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.
THIRUNELVELI & MADRAS - 1.

விலை அணா 10.

அப்பர் அச்சகம் சென்னை 1.